## ஆண்டாள் அருளிச் செய்த
# நாச்சியார் திருமொழி 4: தெள்ளியார் பலர்
## (கூடலிழைத்தல்)

534 * தெள்ளியார் * பலர் கை தொழும் தேவனார் *
வள்ளல் * மாலிருஞ்சோலை மணாளனார் **
பள்ளி கொள்ளும் இடத்து * அடி கொட்டிட *
கொள்ளுமாகில் நீ கூடிடு கூடலே! 1

535 * காட்டில் வேங்கடம் * கண்ணபுர நகர் *
வாட்டம் இன்றி * மகிழ்ந்துறை வாமனன் **
ஓட்டரா வந்து * என் கைப் பற்றி * தன்னொடும்
கூட்டுமாகில் நீ கூடிடு கூடலே! 2

536 பூமகன் புகழ் வானவர் * போற்றுதற்
காமகன் * அணி வாணுதல் * தேவகி
மாமகன் ** மிகு சீர் * வசுதேவர் தம் *
கோமகன் வரில் * கூடிடு கூடலே! 3

537 ஆய்ச்சிமார்களும் * ஆயரும் அஞ்சிட *
பூத்த நீள் * கடம்பேறிப் புகப் பாய்ந்து **
வாய்த்த காளியன் மேல் * நடம் ஆடிய *
கூத்தனார் வரில் * கூடிடு கூடலே! 4

538 மாட மாளிகை சூழ் * மதுரைப் பதி
நாடி * நந்தெருவின் * நடுவே வந்திட்டு **
ஓடைமா * மத யானை உதைத்தவன் *
கூடுமாகில் * நீ கூடிடு கூடலே! 5

539 அற்றவன் * மருதம் முறிய நடை
கற்றவன் * கஞ்சனை * வஞ்சனையினால்
செற்றவன் ** திகழும் மதுரைப் பதி *
கொற்றவன் வரில் * கூடிடு கூடலே! 6

540 அன்று இன்னாதன செய் * சிசுபாலனும் *
நின்ற நீள் மருதும் * எருதும் புள்ளும் **
வென்றி வேல் * விறல் கஞ்சனும் வீழ * முன்
கொன்றவன் வரில் * கூடிடு கூடலே! 7

541 ஆவல் அன்புடையார் தம் * மனத்தன்றி
மேவலன் * விரை சூழ் * துவராபதிக்
காவலன் ** கன்று மேய்த்து விளையாடும் *

கோவலன் வரில் * கூடிடு கூடலே! 8

542 கொண்ட கோலக் * குறள் உருவாய்ச் சென்று *
பண்டு மாவலி தன் * பெரு வேள்வியில் **
அண்டமும் நிலனும் * அடி ஒன்றினால் *
கொண்டவன் வரில் * கூடிடு கூடலே! 9

543 பழகு நான்மறையின் பொருளாய் * மதம்
ஒழுகு வாரணம் * உய்ய அளித்த ** எம்
அழகனார் * அணி ஆய்ச்சியர் சிந்தையுள் *
குழகனார் வரில் * கூடிடு கூடலே! 10

544 ***** ஊடல் கூடல் * உணர்தல் புணர்தலை *
நீடு[1] நின்ற * நிறை புகழ் ஆய்ச்சியர் **
கூடலைக் * குழற் கோதை முன் கூறிய *
பாடல் பத்தும் வல்லார்க்கு * இல்லை பாவமே 11

**அடிவரவு:** தெள்ளியார் காட்டில் பூமகன் ஆய்ச்சிமார்கள் மாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு

[1] நீடி